செய்தி வெளியீடு எண்: 238 நாள்: 30.03.2020

## கொரோனா தடுப்பு காலத்தில் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்வதற்கு, தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய செய்தி வெளியீடு

தமிழகத்தில் கொரானா தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்காக, 144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ள இச்சமயத்தில், விவசாயிகள் தங்கள் பயிர்களை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்து கொள்ள உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளைப் பதிவு செய்வதற்கு அரசு சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் காரணமாக, **2016–17 முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை 7 ஆயிரத்து 702 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு 2019–20ஆம் ஆண்டில் இதுவரை 22 இலட்சத்து 16 ஆயிரம் விவசாயிகள், சாகுபடி செய்த 32 இலட்சத்து 87 ஆயிரம் ஏக்கர் பயிர்கள், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.**

தற்போது, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கோடைக் காலத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், நெல் தரிசாக சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி, திருச்சி, திருவாரூர் மாவட்டங்களில் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எள், சேலம், தேனி மாவட்டங்களில் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி, கன்னியாகுமரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல்தரிசு உளுந்து போன்ற பயிர்களை காப்பீடு செய்வதற்கு உள்ள காலக்கெடு 31.3.2020 ஆக ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட விழிப்புணர்வு முகாம்களின் விளைவாக, பெரும்பாலான விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தங்களை பதிவு செய்துவிட்டனர்.

இருப்பினும், ஒருசில விவசாயிகள் காலக்கெடு முடியும் நிலையில், தங்கள் பயிரை காப்பீடு செய்வதற்கு முயற்சித்து வருகின்றனர். காப்பீடு செய்து கொள்ள

விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட வகைகளில் தங்கள் பயிர்களை **31.3.2020**க்குள் காப்பீடு செய்து கொள்ளலாம்:-

1) பயிர்க் கடன் பெறும் விவசாயிகளும், பயிர்க்கடன் பெறாத விவசாயிகளும் தங்கள் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தி மேற்கண்ட பயிர்களை காப்பீடு செய்து கொள்ளலாம்.
2) இறுதி காலக்கெடுவான **31.3.2020**க்குள் மேற்கண்ட பயிர்களை காப்பீடு செய்து கொள்ள விரும்பும் விவசாயிகளின் உதவிக்காக, சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண் இணை இயக்குநர்களின் அலைபேசி எண்கள் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| i) | வேளாண் இணை இயக்குநர், நாகப்பட்டினம். | .. | **9750197636** |
| ii) | வேளாண் இணை இயக்குநர், திருவாரூர். | .. | **7397753311** |
| iii) | வேளாண் இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி | .. | **9443021750** |
| iv) | வேளாண் இணை இயக்குநர், சேலம். | .. | **9944980436** |
| v) | வேளாண் இணை இயக்குநர், தேனி | .. | **9443828843** |
| vi) | வேளாண் இணை இயக்குநர், கன்னியாகுமரி | .. | **9965568051** |

மக்களின் நலனுக்காக அரசு அறிவித்துள்ள தடை உத்தரவு அமுலில் இருந்தபோதிலும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பதிவு செய்வதில் சிரமம் ஏற்படக்கூடாது என்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள இந்த சேவையினை சம்பந்தப்பட்ட மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தி, அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தங்கள் பயிரை **31.3.2020**க்குள் காப்பீடு செய்து கொள்ள வேண்டும் என இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

வேளாண் உற்பத்தி ஆணையர் (ம)
அரசு முதன்மைச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**